<u>சாதாரணக் கூட்டம்</u>

கூத்தாநல்லூர் நகராட்சியின் 2020ம் ஆண்டு ஜீன் மாதம் 30 நாள் புதன்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற <u>சாதாரணக் </u>கூட்ட நடவடிக்கைகள்

| மன்றக்கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப்பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|
| 30.06.2021 | **பொருள் எண்** 1<br>நகராட்சி ஆணையர் அவர்களது மே 2021 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது<br>அலுவலக குறிப்பு :- பதிவு செய்யலாம் (ந.க.எண். 2105/2011/சி1) | தீர்மானம் எண்:- 876<br>பதிவு செய்யப்பட்டது |
| 30.06.2021 | பொருள் எண் 2<br>நகராட்சி பொறியாளர் அவர்களது மே 2021 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது<br>அலுவலக குறிப்பு :- பதிவு செய்யலாம் (ந.க.எண். 2105/2011/சி1) | தீர்மானம் எண்:- 877<br>பதிவு செய்யப்பட்டது |
| 30.06.2021 | **பொருள் எண்** 3<br>இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் உள்ள 12 எண்ணிக்கை பேட்டரியால் இயங்கக்கூடிய வாகனங்களில் 7 வாகனங்கள் பழுதுகளுடன் இயங்கி கொண்டும், 5 வாகனங்களில் பேட்டரிகள் முழுவதுமாக பழுதடைந்துள்ளன. எனவே திடக்கழிவு மேலாண்மை பணியான முதல்நிலை சேகரிப்பு பணி தொய்வடையும் நிலையில் உள்ளது. எனவே 5 வாகனங்களுக்கு லித்தியம் பெர்ரஸ் பாஸ்பேட் பேட்டரிகளை புதியதாக மாற்றம் செய்யவும் மேற்படி 5 வாகனங்களை பழுதுகளை நீக்கம் செய்வதற்கும் ஆகும் உத்தேச செலவினமான ரூ.3,50,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**:-<br>மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண். 664/2020/எச்1) | தீர்மானம் எண்:-878<br>**ஏற்கப்பட்டது** |
| 30.06.2021 | **பொருள் எண்** 4<br>இந்நகராட்சிக்குட்பட்ட கூத்தாநல்லூர் வட்டம், பண்டுதக்குடி கிராமம். புல எண் 56/5pt, 8, 75/1,2Apt, 2B pt, 76, 79 pt-ல் 296279.10 சதுர அடி பரப்பளவு கொண்ட அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவினை அரசாணை எண் 78, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள் 4.5.17ன்படி முறைபடுத்த திரு.A. முகம்மது ஜெகபர் சாதிக் அவர்களின் விண்ணபத்தினை நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், தஞ்சாவூர் அவர்களுக்கு கொள்கையளவில் ஒப்புதல் பெற அனுப்பப்பட்டதின் அடிப்படையில் ந.க.எண். 1228/2018 த.ம.3 நாள் 26.02.2020ல் துணை இயக்குநர் தஞ்சாவூர் அவர்களின் கடிதத்தில் மேற்கண்ட அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொள்கையளவில் ஒப்புதலளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் கண்டுள்ளவாறு சாலை மற்றும் பூங்கா ஆகியவைகளை நகராட்சி பெயருக்கு தானபத்திரம் மூலம் பதிவு செய்து அதன் | தீர்மானம் எண்:- 879<br>**ஏற்கப்பட்டது** |

நகலினை அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கினங்க அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவு உரிமையாளர் திரு.A. முகம்மது ஜெகபர் சாதிக் அவர்கள் கூத்தாநல்லூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் மேற்படி இடத்தின் பூங்கா மற்றும் சாலைகளை ஆவண எண் 328/2020 நாள் 09.03.2020ன்படி நகராட்சி பெயருக்கு பதிவு செய்து தான பத்திர அசலினை நகராட்சி அலுவலகத்தில் சமர்பித்துள்ளார். மேலும் அதில் முதல்கட்டமாக 69 மனைகளுக்கு ஒப்புதல் வழங்குமாறும் கோரியுள்ளார். மேற்கண்ட மனுதாரரின் கோரிக்கையாகிய 69 மனைகளுக்கு ஒப்புதல் வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், தஞ்சாவூர் மண்டலம் அவர்களின் கடிதத்தில் கண்டுள்ளவாறு பூங்கா மற்றும் சாலைகளை நகராட்சி பெயருக்கு தானமாக திரு.A. முகம்மது ஜெகபர் சாதிக் அவர்களால் வழங்கப்பட்ட தானபத்திரத்தில் கண்டுள்ளவாறு பூங்கா மற்றும் சாலைகளை நகராட்சி ஏற்று பராமரிக்கலாம்.
2. மனுதாரர் திரு.A. முகம்மது ஜெகபர் சாதிக் அவர்கள் நகராட்சி பெயருக்கு, பூங்கா மற்றும் சாலைகளை தானபத்திரம் மூலம் வழங்கப்பட்ட சாலைகளை சாலை பதிவேட்டிலும் மற்றும் பூங்காவனை சொத்து பதிவேட்டிலும் பதிவு செய்யலாம்.
3. மனுதாரர் திரு.A. முகம்மது ஜெகபர் சாதிக் அவர்கள் கோரியுள்ளவாறு அறுபத்து ஒன்பது மனைகளுக்குரிய முறைபடுத்துதல் கட்டணம் ரூ.4,93,633/-ஐ (8227.21 சமீ x 60.00=ரூ.4,93,633/-) அரசு கருவூலத்தில் 15.06.2021 அன்று செலுத்தி அதன் ரசீது நகலும் சமர்பிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட அறுபத்து ஒன்பது மனைகளுக்குரிய வளர்ச்சி கட்டணம் ரூ.12,34,082/-ஐ (8227.21 ச.மீ x 250.00 = ரூ.12,34,082) இந்நகராட்சி கருவூலத்தில் 15.06.2021 அன்று செலுத்தப்பட்டுள்ளது. (Chalan No 0057245)
4. தானபத்திர அசல் பெறப்பட்டுள்ளது. எனவே மனுதாரர் கோரியுள்ளவாறு முதற்கட்டமாக 69 மனைகளுக்கு 4. 5. 6. 7. 8. 9. 10. 11. 12. 13. 15. 16. 17. 18. 19. 26. 27. 28. 29. 30. 32. 33. 34. 35. 36. 37. 38. 41. 50. 51. 52. 53. 54. 55. 56. 57. 60. 61. 62. 63. 64. 65. 77. 80. 81. 82. 84. 85. 86. 87. 88. 89. 90. 117. 118. 119. 120. 121. 122. 129. 130. 131. 132. 133. 134. 135. 136. 157. 159. 160 (8227.21 ச.மீ) முறைப்படுத்தி அனுமதி வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
5. மேலும் மேற்கண்ட அனுமதியற்ற மனைப்பிரிவில் கொள்கையளவில் ஒப்புதல் பெறப்பட்டு தற்பொழுது அனுமதி வழங்கப்படும் 69 மனைகள் தவிர மீதமுள்ள 82 மனைகளுக்கு முறைபடுத்துதல் கட்டணம், மற்றும் வளர்ச்சி கட்டணம், ஆகியவற்றை மனை உரிமையாளர் செலுத்தி பெறப்படும் விண்ணப்பங்களுக்கு ஏற்ப மனைகளை முறைபடுத்தவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**கோப்பு எண்** 254/2021/எப்-1)

<table>
<tr>
<td>30.06.2021</td>
<td>
பொருள் எண் 5<br>
இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கி வந்த TN 51 X 3572 கழிவு நீர் லாரி 24.12.1994 ஆம் ஆண்டு வாங்கப்பட்டு 20 வருடங்களுக்கு மேலாகி பயன்படுத்தப்படாமல் உள்ளது. எனவே அவ்வாகனத்தினை உருக்குலைப்பு செய்து மோட்டார் வாகன பராமரிப்பு துறை மன்னார்குடி அவர்களிடம் வாகனத்தை கழிவு செய்ய உரிய சான்று பெறுவதற்காக இவ்வாகனத்திற்கு நேஷனல் இன்சூரன்ஸ் காப்பீடு நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட காப்பீட்டு தொகையான ரூ.9658/- அந்நிறுவனத்திற்கு செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு<br>
1. மன்றம் அனுமதிக்கலாம்<br>
2. பொது நிதியிலிருந்து பயன்படுத்தலாம்.<br>
(ந.க.எண். 1757/2014/எச்1)
</td>
<td>தீர்மானம் எண்:- 880<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>30.06.2021</td>
<td>
பொருள் எண் 6<br>
இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வந்த 12 எண்ணிக்கை பேட்டரியால் இயங்கக்கூடிய வாகனங்களுக்கு புதியதாக பேட்டரி சார்ஜர்கள் 10 எண்ணிக்கை உடனடியாக வாங்கும் பணிக்கு 17.06.2021 அன்று போடப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்க்கண்டவாறு இரண்டு நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளன.
<table>
<tr><th>வ. எண்.</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தபுள்ளி தொகை (ரூபாயில்)</th><th>ஒப்பந்ததாரரால் குறிப்பிடப்பட்ட தொகை (ரூபாயில்)</th></tr>
<tr><td>1</td><td>PRIYAM INDUSTRIES AND ENGINEERING PRIVATE LIMITED. DHARAPURAM</td><td rowspan="2">90000/-<br>(10 சார்ஜர்கள்)</td><td>ஒரு சார்ஜர் - ரூ. 8900/-<br>10 சார்ஜர் - ரூ. 89000/-</td></tr>
<tr><td>2</td><td>ARUN INDIAN MOTORS, SALEM</td><td>ஒரு சார்ஜர் - ரூ. 10250-<br>10 சார்ஜர் - ரூ. 102500/-</td></tr>
</table>
மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள PRIYAM INDUSTRIES AND ENGINEERING PRIVATE LIMITED. DHARAPURAM நிறுவனமிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி தொகை மதிப்பீட்டினைவிட குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது<br>
அலுவலக குறிப்பு<br>
குறைவான ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்<br>
(ந.க.எண். 664/2020எச்1)
</td>
<td>தீர்மானம் எண்:- 881<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 30.06.2021 | **பொருள் எண்** 7<br>இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் **TN 50 AS 3600 (TATA ACE)** என்ற வாகனத்திற்கு 14.07.2021 உடன் முடிவடைவதால் அதை மேலும் ஓராண்டிற்கு புதுப்பிக்க ரூ.22,439/-னை நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் நிறுவனத்திற்கு மேற்கண்ட தொகையினை செலுத்துவதற்**கும் மேலும் வாகனத்தினை பழுது நீக்கம் செய்து தகுதிசான்று பெற ரூ**.1,10,000/-**க்கும்** மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண். 706/2019/எச்1) | தீர்மானம் எண்:- 882<br>அனுமதிக்கப்பட்டது |
| | **பொருள் எண்** 8<br>இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் TN 50 AS 3522 (TATA ACE) என்ற வாகனத்திற்கு 14.07.2021 உடன் முடிவடைவதால் அதை மேலும் ஓராண்டிற்கு புதுப்பிக்க ரூ.22,439/-னை நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் நிறுவனத்திற்கு மேற்கண்ட தொகையினை செலுத்துவதற்**கும் மேலும் வாகனத்தினை பழுது நீக்கம் செய்து தகுதிசான்று பெற ரூ**.1,10,000/-**க்கும்** மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண். 706/2019/எச்1) | தீர்மானம் எண்:- 883<br>அனுமதிக்கப்பட்டது |
| | **பொருள் எண்** 9<br>இந்நகராட்சியில் குடிநீர் பராமரிப்பு மற்றும் பழுது நீக்கம் செய்யும் பணிகளுக்கு இந்நகர் மன்ற தீர்மான எண் 726 நாள் 29.05.2020ல் ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் வீ.எழில்மாறன் என்ற ஒப்பந்த்தார்ருக்கு அனுமதி பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்படி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தகாலம் 30.06.2021ம் தேதியுடன் முடிவடைய உள்ளதால் கோடைகால குடிநீர் பணிகள் அவசர அவசியம் கருதியும், நிர்வாக நலன் கருதியும் மேற்கண்ட ஒப்பந்ததாரருக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட அதே ஒப்பந்தபுள்ளியின் விலை விகித்திலேயே பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் குடிநீர்பணிகள் மேற்கொள்ளவும், மேலும் மூன்று மாதங்களுக்கு மட்டும் நீட்டிப்பு செய்யவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.2,40,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மானம் எண்:- 884<br>அனுமதிக்கப்பட்டது |

**பொருள் எண்** 10

இந்நகராட்சிக்கு உட்பட்ட 1 முதல் 24 வார்டுகளிலும் 7 மெட்ரிக் டன் தினசரி கழிவுகள் நாள் ஒன்றுக்கு சேகரமாகிறது. அவ்வாறு சேகரமாகும் கழிவுகளை குனுக்கடி உரக்கிடங்கில் 2 மெட்ரிக் டன் அளவுக்கு தரம் பிரிக்கப்பட்டு சேமிக்கப்பட்டு நுண்ணுயிர் உரமாக மாற்றப்பட்டும், 1 மெட்ரிக் டன் குப்பை கழிவுகளை ரேடியோ பார்க்கில் உள்ள OCC மூலம் உரமாக மாற்றப்பட்டும், மீதமுள்ள 2 மெட்ரிக் டன் குப்பை கழிவுகளை புதிதாக 15வது நிதிக்குழு மான்ய நிதியின் கீழ் 14வது வார்டு மேல்கொண்டாழி மேல்நிலை தொட்டி வளாகத்தில் OCC கட்டிடம் அமைக்கப்பட்டு நுண்ணுயில் உரமாக மாற்றி கட்டப்பட்டுள்ளது. அதில் புதியதாக 15வது நிதிக்குழு திட்டம் முதல் தவணைத் தொகையில் **Shredder Machine** வாங்கப்பட்டுள்ளது. இதனால் இந்நகரில் சேகரமாகும் தினசரி குப்பைகளை மேற்படி **Shredder Machine** மூலம் சிறு, சிறு துகள்களாக வெட்டி உரக்கிடங்குகளுக்கு அனுப்பவும் மணிக்கு ஒரு டன் வீதம் அரைத்து அப்புறப்படுத்தவும் 12 மீட்டர் X 6 மீட்டர் அளவிலான ஒரு கட்டிடம் அமைப்பதற்கான மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. **மன்றம் அனுமதிக்கலாம்**.
2. **பொது நிதியில் மேற்கொள்ளலாம்**.

தீர்மானம் எண்:- 885
அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்** 11

இந்நகராட்சி புதிய அலுவலக கட்டிடத்தின் உட்புறம், வெளிப்புறங்களில் CCTV கேமரா 8 No மற்றும் 32 Inch Television, மற்றும் உதிரிபாகங்கள் கொண்டு அமைத்தல் மற்றும் பழைய நகராட்சி அலுவலகத்தில் 6 எண்ணம் CCTV Camera மற்றும் உதிரிபாகங்கள் கொண்டு அமைக்கும் பணிக்கு 29.06.2021 தேதி அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்ட ஒப்பந்ததாரரிடமிருந்து இரண்டு ஒப்பந்தபுள்ளிகள கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்தபுள்ளி தொகை |
|---|---|---|---|
| 1 | அபி கம்யுனிகேசன் லோனா பிளாசா லெட்சுமாங்குடி | 55000 | 53640 |
| 2 | நெக்ஷன் கம்யூட்டர்ஸ் மெயின் ரோடு அம்மாபேட்டை | 55000 | 56150 |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள அபி கம்யுனிகேசன் லோனா பிளாசா லெட்சுமாங்குடி என்பவரின் ரூ.53640 குறைந்த ஒப்பந்தபுள்ளியினை ஏற்கலாம். மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு குறைவான ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம் (ந.க.எண். /2020/இ1)

தீர்மானம் எண்:- 886
அனுமதிக்கப்பட்டது

ஆணையர் / தனி அலுவலர்
கூத்தாநல்லூர் நகராட்சி